# கதம்பம்

ஜனவரி 2024 திருவள்ளுவர் ஆண்டு 2055

அனைவருக்கும் இனிய 2024ஆம்
ஆண்டு புத்தாண்டு
நல்வாழ்த்துகள்!

2024

25-வது ஆண்டு சேவை புரியும் இரிச்மண்டு
தமிழ்ச் சங்கத்திற்கு மனமார்ந்த வாழ்த்துகள்.

## இந்த இதழில்...


03 அறிவிப்பு மடல்

04 தமிழர்தம் பொன்னாள்

05 திரையும் இசையும்

06 கதை நேரம்

10 என்னைக் கவர்ந்த சில வைர வரிகள்

11 எனது பார்வையில் அமெரிக்கா

15 நன்றி உரை


(பக்கத்திற்குச் செல்ல தலைப்பைக் கிளிக் செய்யவும்)



# இரிச்மண்டு தமிழ்ச்சங்கம் பெருமையுடன் வழங்கும்

மண் மணம் கமழ, இசை நிகழ்ச்சியுடன்

# பொங்கல் வாழை இலை விருந்து

## Pongal Banana Leaf Feast - 2024

**Food Catered From Anjappar, Cary - NC**

ANJAPPAR
Chettinad Indian Restaurant

## Non-Vegetarian

- Buhari Spl Chicken 65 Bone-In
- Chettinad Mutton Sukka Varuval
- Gramathu Vanjaram Fish Fry
- Thalapakattu Mutton/Kuska Biryani
- Madras Style Mahi Meen Kozhambu
- Madras Spl Chicken Kola Urundai
- Mango Pachadi
- Karaikudi Chicken Curry
- Nei Paruppu Kootu
- Carrot & Beans Poriyal
- Papad
- Raita
- White Rice
- Arachivitta Sambar
- Rasam
- Curd / Pickle
- Parupu Payasam
- Anjappar Spl Homemade Laddu

## Vegetarian

- Buhari special Gobi 65
- Vazhaipoo Vadai
- Nei Paruppu Kootu
- Carrot & Beans Poriyal
- Ennai Katthirikai Thokku
- Mango Pachadi
- Podi Potta Urulai Roast
- Chennai Style Brinji Biryani
- Avial
- Papad
- Veg Kothu Parotta
- White Rice
- Arachivitta Sambar
- Karaikudi Spl Poondu Kozhambu
- Poricha Kozhambu (Paal Curry)
- Curd / Pickle
- Rasam
- Parupu Payasam
- Anjappar Spl Homemade Laddu

| | |
|---|---|
| Adult-NonVeg | $29.00 |
| Adult-Veg | $24.00 |
| Kids -NonVeg | $19.00 |
| Kids-Veg | $14.00 |

**VENUE : Deep Run High School**

**4801 Twin Hickory Road Glen Allen, VA 23059**

**DATE : January 28, 2024**

**TIME : 12 Noon - 3:30 PM**

## Our Proud Sponsor

Sumi

Global Sumi Technologies Inc

www.globalsumi.com

RESTRICTED
MEMBERS ONLY
RESTRICTED

# தமிழர்தம் பொன்னாள்

(நொணம்பூர் கண்ணன்)

பொன்னிமகள் பூத்திருப்பாள் மார்கழி மையலிலே
போரடித்துக் குவித்திடுவார் தைநெல் தையலையே
பிறந்தவிடம் சொந்தமென விளைநெல் இருப்பதில்லை
புகுந்தவிடம் தனதெனவே தஞ்சமெனக் கொண்டநிலை
கழனியிலே கடும் வெப்பக் காற்றுமழை உடனிருக்க
உழன்றதிலே செந்நெல்லை உற்பத்தி செய்வதனால்
உழவரென்ற உயர்வான பட்டமதைப் பெற்றாரோ?
உலகமகா உச்சாணிப் புகழினையே அடைந்தாரோ!
ஊருக்கே உணவளிக்கும் உன்னை தெய்வத்துக்கு
பொருளுக்கு தகுந்த விலை எப்போது கிடைக்குமோ—அன்று
உழைத்த முகத்தினிலே மகிழ்ச்சி பொங்கிடும்
விவசாயி தலை நிமிர்ந்து வாழ்ந்திடவே வழிவகுக்கும்

உழவனின் தோழனாம் உழைத்திடும் எருதுகள்
மழலைகள் குரல்கேட்டு மடிதிறக்கும் ஆவினம்
குழலூதும் மன்னனின் கோலமிகு கோபியர்
குதூகலம் கொப்பளிக்கக் கொண்டாடும் பொங்கல்
தை முதல் நன்னாள் தமிழர்தம் பொன்னாள்
தரணியில் சிறந்தநாள் தங்கதிகர் திருநாள்!

=x=

# திரையும் இசையும் - சிவரஞ்சனி (பாகம் 3)

இந்த 22 ஆம் மேளகர்த்தா ராகம் கரஹரப்ரியாவின் வம்சத்தில் வரும் ராகம்.

திரைப்படங்களில், இந்த ராகத்தை தழுவி அமைந்த மற்றும் சில பாடல்கள் :

Arohanam: S R2 G2 P D2 S
Avarohanam: S D2 P G2 R2 S

| திரைப்படம் | பாடல் | இசையமைப்பாளர் |
|---|---|---|
| நான் அடிமை இல்லை | ஒரு ஜீவன்தான் | விஜய் ஆனந்த் |
| சோலையம்மா | கூவர குயிலு | தேவா |
| தெற்கு தெரு மச்சான் | ஏழேழு பந்தம் | தேவா |
| வாட்ச்மேன் வடிவேலு | கன்னத்தில் கன்னம் வைக்க | தேவா |
| அழியாத கோலங்கள் | பூவண்ணம் போல நெஞ்சம் | சலீல் சௌதிரி |
| திருடா திருடா | கண்ணும் கண்ணும் கொள்ளை | ஏ ஆர் ரஹ்மான் |
| Mr. ரோமியோ | தண்ணீரை காதலிக்கும் | ஏ ஆர் ரஹ்மான் |
| ஜோடி | அஞ்சாதே ஜீவா | |
| உயிருள்ளவரை உஷா | வைகைக்கரை காற்றே நில்லு | விஜய டி. ராஜேந்தர் |
| செந்தூரப்பூவே | செந்தூரப்பூவே | மனோஜ் கியான் |
| புது வசந்தம் | பாட்டு ஒண்ணு நான் | எஸ். ஏ. ராஜ்குமார் |
| பூவே உனக்காக | ஆனந்தம் ஆனந்தம் | எஸ். ஏ. ராஜ்குமார் |
| சிம்மராசி | வானத்து நிலவெடுத்து | எஸ். ஏ. ராஜ்குமார் |
| கண்ணோடு கண் | எனைத்தேடும் மேகம் | ஷங்கர் கணேஷ் |
| மனைவி ஒரு மந்திரி | மூங்கிலிலை காடுகளே | ஷங்கர் கணேஷ் |
| பாண்டவர் பூமி | அவரவர் வாழ்க்கையில் | பரத்வாஜ் |
| ரூபாய் | உன்கூட பேசத்தானே | டி. இம்மான் |

தொகுப்பு : நாராயணன் சுப்ரமணியன்

# கதை கேட்க ரொம்ப பிடிக்குமா? அப்ப, இதோ....




கொரோனா உயிர்கொல்லி நோயால் உலகமே ஸ்தம்பித்திருந்த சமயத்தில், விமானங்கள் ரத்து, விசா **appointment** கிடைக்காதது என்று பல தடங்கல்களால் மூன்றரை ஆண்டுகளாக இந்தியாவுக்கு செல்ல முடியாமல், ஒன்றரை வயது குழந்தையாக இருக்கும்போது பார்த்த எனது தங்கையின் குழந்தையை மீண்டும் எப்போது பார்ப்பேன் என்று ஏங்கியிருந்த சமயத்தில், வார இறுதி என்றால் தவறாமல் வீடியோ அழைப்பில் மட்டுமே பார்த்து வந்த அத்துக்குட்டியுடன் (அத்வித் சேஷாத்திரி) அதையும் தாண்டி ஒரு பிணைப்பை ஏற்படுத்திக்கொள்ள என்ன செய்யலாம் என்று எண்ணியபோது ஒரு நாள் **whatsapp**-இல் கதை ஒன்று சொல்லி அனுப்பினேன்.

அப்போது அவனுக்கு இரண்டரை வயது இருக்கும், அனுப்பிய கதை பிடித்துப்போகவே இரண்டு மூன்று நாள்கள் தூங்கும் முன்பு அந்தக் கதையையே கேட்டுக் கேட்டு ரசிக்கிறான் என்று என் தங்கை சொல்லவே, வேறு புதுக் கதையை அடுத்தடுத்த நாட்கள் அனுப்பியபோது அதையும் மிகவும் ரசித்துக் கேட்டு உறங்க ஆரம்பித்தான் என்று என் தங்கை சொல்வதை கேட்டவுடன் கிடைத்த ஆனந்தத்தை வார்த்தைகளால் விவரிக்க முடியாது.

எனக்கும் என் தங்கைக்கும் நாங்கள் சிறு வயதில் இருந்தபோது எங்கள் அப்பா நாள் தவறாமல், சலிக்காமல் கதைகள் சொல்வதை கேட்டுக்கொண்டே தூங்கிய பழக்கத்தோடு வளர்ந்தவர்கள் நாங்கள். அந்த ஒரு தருணம் மீண்டும் வந்தது போல இருந்தது. இப்படி **whatsapp**-இல் சில நாட்களாக கதைகளை அனுப்பியபோது, அந்தக் கதையை எனது உறவினர்களின் குழந்தைகளுக்கும் அனுப்பியபோது அந்தக் குழந்தைகளும் ரசித்து கேட்டு தூங்கினார்கள் என்று தெரிந்த சமயம் தான் இந்தக் கதைகளை அனைத்து மழலைகளுக்கும், குழந்தைகளுக்கும் கிடைக்கப்பெற செய்யவேண்டும் என்ற எண்ணம் உதித்தது.

அப்படி ஆரமித்தது தான் "கதை நேரம்" என்ற இந்தக் குழந்தைகளுக்கான ஆடியோ **podcast**.

பெரும்பாலான இல்லத்தில் இன்றைய குழந்தைகளின் தூங்கும் நேரம் மிக மிக தாமதமாக மாறிவிட்டது, இதற்கு முக்கிய காரணம் தொலைக்காட்சி மற்றும் கைபேசியில் காணொளிகளை தூங்கச் செல்லும் நேரம் வரை பார்ப்பது தான், **iPad/** கைபேசியிலிருந்து வரும் நீல வெளிச்சமானது தூக்கத்தை உண்டுபண்ணும் **Melatonin** என்ற அமிலத்தை சுரப்பதில் சுணக்கம் காட்டி மேலும் தூக்கத்தை தாமதமாக்கிவிடும் தன்மைக் கொண்டது.

ஆனால், சமீப ஆண்டுகளாக **podcast** கலாச்சாரம் குழந்தைகள் மட்டுமல்ல, பெரியவர்களையேயும் கூட தாமதமாக தூங்கும் பழக்கத்திலுருந்து மாற்ற ஆரமித்திருக்கிறது என்பது பெருகிவரும் பல புதிய **podcast**-களினால் தெரிகிறது. **Spotify** போன்ற சில பெரிய நிறுவனங்கள் பல முக்கிய பிரமுகர்களைக் கொண்டு தங்களுக்காக பிரத்தியேகமாக ஒலிநாடாக்களை தயாரித்து வெளியிட்டு வருவது, குறிப்பாக தமிழில் பல புதிய படைப்புகள் நாளுக்கு நாள் பெருகிவருவது, மக்கள் மத்தியில் இந்த **podcast** கலாச்சாரம் பெற்றிருக்கும் வரவேற்பைக் காட்டுகிறது.

வானொலியில் தென்கச்சி சுவாமிநாதன் அவர்கள் சொன்ன கதைகளை கேட்காதவர்களே இருக்கமாட்டார்கள், அப்படி இருக்க முன்பு எட்டாக்கனியாக இருந்த வானொலியில் பேசுவது என்பது இன்று **podcast** வழியே பலருக்கும் வகை செய்துகொடுத்துள்ளது. மயிலாப்பூர் விவேகானந்தா கல்லூரியில் படித்த சமயத்தில் சென்னை **All India Radio/** தூர்தர்ஷன் - ஆகாஷ்வாணியில் நான்கு, தனித் தனி பத்து நிமிட நிகழ்ச்சிகளை செய்யும் வாய்ப்பு கிடைத்தது, அங்கே வானொலி நிலையத்துக்கு சென்று பிரத்யேக அறைகளில் இருந்துகொண்டு ஒலிப்பதிவு செய்தபோதெல்லாம் பிந்தைய ஆண்டுகளில் வீட்டில் இருந்த இடத்திலிருந்தே வானொலியில் பேசுவதுபோன்ற அனுபவங்களை தனி நபர்களாலேயே செய்துகொள்ள முடியும் என்பது என் சக்திக்கு அப்பாற்பட்ட ஒரு விஷயம்.

ஆனால் இன்றோ, நான் சிறு வயதில் அப்பாவிடம் கேட்ட கதைகள், ஓசூரில் எங்கள் வீதியில் வளர்ந்த குழந்தைகளையெல்லாம் கூட்டிக்கொண்டு வீதியிலே ஒரு திண்ணை அருகில் உட்கார வைத்து, வாரம் இருமுறைக்குமேல் எங்களுக்கு "முதல் அத்தை" என்ற ஒரு பெண்மணி கதைகள் சொல்வார், அந்தக் கதைகளை நினைவுகூர்ந்தும், பள்ளிக்கூடத்தில் என்னைக் கவர்ந்த, இன்றும் எனக்கு நினைவில் நிற்கும்படி அமைந்த துணைபாடபுத்தகத்தில் படித்த கதைகளுள் சில, விநாயகர் சதுர்த்தி, தீபாவளி, பொங்கல் என்று எனது சிறு வயது குறும்பு அனுபவங்கள், இந்தியா மட்டுமல்லாது பல நாடுகளிலும் சொல்லப்படும் பொதுவான நன்னெறிக்கதைகள் என்று மொத்தம் ஐம்பத்து நான்கு மணிநேரத்துக்கான **500**க்கும் மேற்பட்ட கதைகளை இதுவரையில் கதைநேரம் **podcast**-இல் சொல்லப்பட்டுள்ளது.

ஆனால் இப்படி கதை சொல்ல ஆரம்பித்த பிறகுதான் நமக்கு சொல்லப்பட்ட பழைய கதைகளில் நமக்கே தெரியாமல் பல நஞ்சான விபரங்கள் சொல்லப்பட்டிருப்பது புரியவந்தது. அலிபாபாவும் நாற்பது திருடர்களும் கதைகள் உட்பட பல கதைகளில் பெண்களை கேலி செய்வது, மற்றவர்களை உருவ கேலி செய்வது, கொள்ளையடிப்பது, கொலைசெய்வது போன்ற விஷயங்களெல்லாம் கூட இயல்பாகவும், தவறற்ற விஷயங்கள் போலவும் சிறுவர்களுக்கு சொல்லப்பட்டிருப்பது கண்டு அதிர்ச்சியாய் இருந்தது. அதனால் ஒவ்வொரு கதையையும் கூர்ந்து ஆராய்ந்து, நிகழ் காலத்துக்கேற்ப மாறுதல்களுடன் சொல்லி வருகிறேன்.

நூறாவது கதையை சொன்னபோது அத்துக்குட்டிக்கு இந்த மாமா சொல்லும் கதைகள் மட்டும் இருக்கக்கூடாது, தாத்தா சொல்லும் கதையும் இருக்க வேண்டும் என்று எண்ணி என் அப்பாவையும் அவரையே கதை சொல்லச் சொல்லி, வார இறுதியில் ஓசூர் தாத்தா கதைகள் என்று அவரின் கதைகளையும் வெளியிட்டு வருகிறேன். எனக்கு தூக்கம் வராத சமயங்களில் அப்பாவின் கதையை நானும் **podcast** வழியே கேட்கிறேன்.

இப்படியாக **2020** ஆக்டோபரில் ஆரம்பித்த கதை நேரத்தில் இன்று படிப்படியாக **Spotify, Google Podcasts, Apple Podcasts, Amazon Music** என்று பல தளங்கள் மூலம், **30**க்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து பதினைந்து லட்சம் முறைக்கும் மேல் இந்தக் கதைகள் கேட்கப்பட்டுள்ளன. எங்கள் வீட்டுக் குழந்தையைத் தாண்டி இன்று பல குழந்தைகள் தொடர்ந்து கதைகள் கேட்பது என்னை மேலும் கதைகள் சொல்ல ஊக்குவிப்பதாய் உள்ளது.

குழந்தைகளின் பெற்றோர்கள் வழியே குழந்தைகள் என்ன நினைக்கிறார்கள் என்பதை ஒரு சர்வே வழியே அன்மையில் கேட்டிருந்தேன். அப்படி சில பெற்றோர்கள் குழந்தைகளுக்கு இந்தக் கதைகளை சொல்லி தூங்க வைப்பதுடன், அவர்களுமே கேட்டுத் உறங்குகிறார்கள் என்பது தெரிந்தபோது மிகப் பெரிய மனநிம்மதியைக் கொடுத்தது. பலர் அவர்களின் குழந்தைகள் மிக விரைவிலேயே தூங்க ஆரமித்துவிடுகிறார்கள் என்று சொல்வதைக் கேட்க்கும் போது அதைவிட பெரிய ஆனந்தம் வேறு இல்லை என்று தான் தோணும். இதுமட்டுமின்றி குழந்தைகளையும் கதை சொல்ல ஊக்கப்படுத்தும் விதமாக ஒவ்வொரு நூறு கதைகளின் நிறைவிலும், குழந்தைகளை கதை சொல்லி அனுப்பிவைக்குமாறு கேட்டு, அவர்கள் குரலில் கதையை இந்த **podcast**-இல் வெளியிட்டும் வருகிறேன். தங்கள் குரலை அவர்கள் கேட்டு மகிழ்ந்ததைப்பற்றி குழந்தைகளின் பெற்றோர்கள் மிக பூரிப்புடன் தெரிவித்தனர்.

நாள் தவறாமல் கதைகளை ஒளிப்பதிவு செய்ய என் மனைவி என்னை ஊக்கப்படுத்துவதாக இருப்பதும் சரி, மாமா “இன்று கதை சொல்லலைன்னா நாளைக்கு ரெண்டு கதைகள் சொல்லனும்” என்று செல்லமாய் கோபித்துக்கொள்ளும் எனது தங்கையின் குழந்தை மட்டுமின்றி, இன்று கதை நேரம் **15,000**க்கும் மேற்பட்ட குடும்பங்களில் கேட்கப்படுகிறது.

இப்படியாக இருக்கும் இந்த கதை நேரம் **podcast**-ஐ நீங்களும் அனைத்து **podcast** செயலிகளிலும் இலவசமாக கேட்கலாம். நிச்சயம் உங்கள் குழந்தைகளும், குழந்தைகளுக்கு நீங்கள் சிறுவர்களாக இருந்தபோது கேட்டு மகிழ்ந்த கதைகளையும் நன்னெறிக் கதைகளையும் சொல்ல விரும்புவோரும் பயனடைவீர்கள் என்று நம்புகிறேன். கதைகளைக் கேட்டுக்கொண்டே கற்பனை ஆற்றலை வளர்த்துக்கொள்வதுடன் தங்களின் கற்பனை உலகில் பயணிக்க தயாராகும் அனைத்துக் குழந்தைகளுக்கும் எனது இதயம் கனிந்த நன்றிகள்.

பி.கு - இந்த **QR code**-ஐ உபயோகித்து அல்லது **https://bit.ly/m/kadhaineram URL** மூலம் உங்களுக்கு விருப்பமான செயலி வழியே நீங்கள் கதைநேரம் கேட்கலாம்.

நன்றி,

பார்கவ் கேசவன்

# என்னைக் கவர்ந்த சில வைரவரிகள்

(நொளம்பூர் கண்ணன்)

1) சுவாசத்தை கவனி, ஆயுள் கூடும் – வார்த்தையைக் கவனி மதிப்பு கூடும் – செயலைக் கவனி நிதானம் கூடும் – எண்ணங்களைக் கவனி வாழ்வில் வெற்றிகள் கூடும்.

2) தட்டிக் கொடு பிறர் தடுமாறும் போது. தட்டிக் கேள் பிறர் தடம் மாறும் போது.

3) எதுவுமே சரியில்லாத போதும், எல்லாமே சரியாகிவிடும் என்று நம்புவது தான் மனித வாழ்க்கை.

4) தோல்விகளைக் கண்டு துவண்டு விடாதே. வாழ்க்கை நீ எதிர்பாராத நேரத்தில் தான் பல ஆச்சரியங்களைக் கொண்டு வரும்.

5) பொதுவாக தவறு செய்வது என்பது வெற்றிக்கு முதற்படி என்பர். ஆனால் செய்த தவறை திருத்திக் கொள்வதுதான் வெற்றியின் முதற்படியாகும்.

6) கவலைகளை மட்டும் பார்த்தால் கடமைகள் மறந்து போகும். ஆனால் கடமைகளை மட்டும் பார்த்தால் கவலைகள் மறந்து போகும்.

7) எதையும் சிந்தித்துச் செய்தால் நமக்குக் கிடைப்பது வெற்றி. ஆனால் எதையும் செய்துவிட்டுச் சிந்தித்தால் கிடைப்பது அனுபவம்.

8) ஒருதாய் தனக்கு என்னவெல்லாம் செய்தாள் என்பதை மனிதன் இறுதிவரை உணர்வதில்லை. அவன் அதை உணரும் போது அவள் இருப்பதில்லை.

நொளம்பூர் கண்ணன்.

# எனது பார்வையில் அமெரிக்கா

(நொளம்பூர் கண்ணன்)

எனது மதிப்பிற்குரிய கதம்பம் இதழ் வாசகர்களுக்கு அன்பு வணக்கங்கள். நான் இந்தியாவில் இருக்கும் போது, ஓய்வு பெற்ற அதிகாரிகள் சங்கப் பணிகள், சென்னை நொளம்பூரில் நாங்கள் உருவாக்கிய ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவிலின் பொறுப்பாளர் என்ற முறையில் உள்ள பல்வேறு பணிகள் என ஓய்வின்றி இயங்கி வந்த எனக்கு அமெரிக்கா வந்த பின்பு என் வாழ்க்கையின் மறு பரிமாணத்தை உணர்ந்தேன். பணிகள் செய்திட வயதோ பதவியோ தடையில்லை என்பது என் தாழ்மையான எண்ணம். இங்கு வந்தது முதல் எனது இரண்டு மகன்களின் சீரிய கவனிப்பால், பல்வேறு இடங்களுக்கு அழைத்துச் சென்று, பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கு பெறச்செய்து என்னை முன்பை விட மிகவும் சுறுசுறுப்பாக ஆக்கிவிட்டார்கள். நானும் என் அனுபவங்களை கதம்பம் இதழ் வாயிலாக உங்களுடன் பகிர்ந்து கொள்ள அரிய வாய்ப்பு கிட்டியதற்கு மிகவும் மகிழ்கிறேன்.

நான் அடுத்தபடியாக என் மகனுடன் சென்ற இடம் வாஷிங்டன் நகரில் இருந்து டல்லஸ் பன்னாட்டு விமான நிலையத்தை கடந்து சாண்டிலி என்ற நகருக்கு அருகே அமைந்த ஆகாய விமானங்கள் அருங்காட்சியகம் தான். அந்த இடத்திற்கு நாங்கள் சென்று அடைந்ததும், அங்கே பிரதான நுழைவு வாயிலுக்கு முன்பாக உட்கார்ந்து ஓய்வெடுக்க மற்றும் உணவருந்தக் கூடிய வகையில் அழகான இருக்கைகள் வரிசையாகப் போடப்பட்டிருந்தன. நாங்களும் சற்று ஓய்வெடுத்துவிட்டு உள்ளே நுழைந்தோம். அந்த கட்டிடங்களின் மொத்த பரப்பளவு 14,24,000/- சதுர அடியாம். இந்த அருங்காட்சியகம் 1993-ம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதி திரு. பில் கிளிண்டன் அவர்களால் தனிச்சட்டம் இயற்றப்பட்டு உருவாக்கப்பட்டது என்று அங்குள்ள செய்திக் குறிப்புகளிலிருந்து அறிந்து கொண்டேன். முதலில் எங்கள் கண்ணில் பட்டது ஒரு மிகப்பழைய கான்கார்டு விமானம் தான். இந்த இடத்தை ஸ்மித் சோனியன் விமானக் காட்சியகம் என்றும் அழைக்கிறார்கள். முதன் முதலில் விமானத்தைக் கண்டுபிடித்த

ரைட் சகோதரர்கள் விமானம் தொடங்கி இதுவரை கண்டு
பிடிக்கப்பட்ட அனைத்து ரக விமானங்களும் அணி அணியாக
அவற்றின் முழு விபரங்களுடன் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.
இத்தனை விமானங்களையும் ஒரே இடத்தில் காணும் அரிய வாய்ப்பு
கிட்டியதில் எங்களுக்கு மகிழ்ச்சியான அனுபவமாக இருந்தது. மேலும்
ஒரு சிறப்பு என்னவென்றால் 15 டாலர் டிக்கெட் வாங்கி ஹெலிகாப்டர்
பயணமும் செய்யலாம். நாங்கள் விடுவோமா! அனைவரும்
இருப்பிடத்தை விட்டு நகரமேலேயே ஹெலிகாப்டர் பயணம் செய்தோம்.
மொத்த விமான அணிவகுப்பையும் சுற்றிப் பார்ப்பதற்கு குறைந்தது
ஒரு நாளாவது தேவைப்படும். இங்கு முதியோர்க்கும், நடக்க முடியாத
வர்களுக்கும் சக்கர நாற்காலி வசதிகளும் உண்டு. இன்னுமொரு
சிறப்பு இந்த அருங்காட்சியகம் பற்றி முழு விபரங்கள், அவர்களின்
மற்ற பணிகள், மற்றும் பல சேவைகள் பற்றிய செய்திகள் பற்றிய
திரைப்படம் காண வேண்டுமா! அதற்காக சொற்பக் கட்டணத்தில்
ஒரு திரையரங்கமும் உள்ளது. இந்த அருங்காட்சியகம் நான்
பார்த்தவரை உலகிலேயே மிகப் பெரியது என நினைக்கிறேன்.

ஒரு வாரம் கழித்து நாங்கள் வாஷிங்டன் D.C.
யிலிருந்து சுமார் 38 மைல்கள் தொலைவில் மேரிலாண்ட்
மாகாணத்தைச் சேர்ந்த பால்டிமோர் என்ற இடத்திற்குச்
சென்றோம். அங்குள்ள INNER HARBOUR – உள் துறைமுகம்
என்னுமிடத்தில் அருமையான மீன்கள் மற்றும் பல நீர் வாழ் உயிர்களின்
பண்ணையும், அதனையொட்டி பல்வேறு பறவைகள் சுதந்திரமாக
உலா வர ஒரு அமேசான் காடுகள் அமைப்பும் பல்வேறு தளங்களில்
இயற்கையான சூழ்நிலையில் வாழும் வகையில் அமைத்துள்ளனர்.
இங்கும் அங்கும் மகிழ்ச்சியுடன் சுற்றித்திரியும் பல்வேறு வகை
மீன்களும், மற்ற நீர்வாழ் உயிரினங்களும் துள்ளிக் குதித்து
விளையாடுவதைப் பார்த்துக்கொண்டே இருக்கலாம். அந்த மீன்கள்
சுதந்திரமாக வாழ்ந்திட கடல்போன்ற அமைப்பும், அதன் நடுவே
பசுமையான மரங்களும், சுற்றிலும் வண்ண வண்ண விளக்குகளும்

பார்ப்பதற்கு மிகவும் ரம்மியமாக இருந்தது. என் பேரன் அந்த மீன்களோடு மீனாக விளையாடிக் கொண்டிருந்தான். சிறுபிள்ளைகள் மிகவும் ரசித்துப் பார்க்க கூடிய இடம் இது என்பது எனது கணிப்பு. அதை முடித்துவிட்டு அடுத்த தளத்திற்கு சென்றதும் அமேசான் காட்டுக்குள் நுழைந்த உணர்வு ஏற்பட்டது. பறவைகள் ஓடியாடி விளையாடுவதும், ஒன்றோடொன்று கொஞ்சி மகிழ்வதும் நம்மை வேறு ஒரு உலகத்திற்கு கொண்டு செல்லும். விருப்பம் போல் புகைப்படங்கள் எடுத்து மகிழ்ந்தோம்.

அதற்கு அடுத்த தளத்திற்கு வந்தால் அங்கே டால்பின்களின் சாகசக்காட்சிகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. அந்த டால்பின்கள் குழந்தைகளைப்போல் செய்யும் குறும்புகள் மிகவும் ரசிக்கும்படி இருந்தது. ஒருவழியாக மீன் பண்ணையை விட்டு வெளியில் வந்தால் அழகான கடற்கரை, கடலன்னையின் மடியில் தவழ்ந்து விளையாடிக் கொண்டிருந்த சிறு கப்பல்கள், படகுகள், மீனவர் வணிகப்படகுகள், ஆனந்த சவாரி செய்து கொண்டிருந்த சொகுசுப் படகுகள் என பலவித கண்கவர் காட்சிகளை ரசித்துக்கொண்டே சற்றே களைப்பாற ஒரு காபிக்கடையில் நுழைந்து விருப்பப்பட்டவை களை அவரவர் சாப்பிட்டு கிளம்பும் போது இரவு மணி ஏழு. அப்போது காபிக்கடை முதலாளியிடம் இதைத்தவிர இனி பார்க்க ஏதேனும் அருகில் முக்கிய இடங்கள் இருக்கிறதா என்று கேட்டேன். அதற்கு அவர் கூறிய பதில் என்னைத் தூக்கிவாரிப்போட்டது. ஐயா, இன்னும் அரைமணி நேரத்தில் கூடியிருக்கும் கூட்டம் கலைந்துவிடும். 8 மணிக்கு மேல் இங்கு மனித நடமாட்டமே இருக்காது. உடனே கிளம்பி பத்திரமாக ஊர்போய் சேருங்கள் என்றார். உடனே படபடவெனக் கிளம்பினோம். அவர் சொன்ன மாதிரி சாலையில் வீட்டிற்கு போகும்போது எதிரே எந்த வண்டி நடமாட்டமும் இல்லை. நல்லவேளை, நலமுடன் வீடு வந்து சேர்ந்தோம்.

மீண்டும் அடுத்த மாதம் வேறொரு இடத்தில் சந்திப்போம்.

நன்றி -

நெளம்பூர் கண்ணன்.

# Special Thanks To Our Sponsors


## Richmond Tamil Sangam

























































**Add your Business**



கதம்பம் ஆசிரியருக்கு எனது பணிவான வணக்கங்கள்,

ஆங்கில வருடப்பிறப்பு மற்றும் பொங்கல் திருநாள் வாழ்த்துக்கள்.

ஒவ்வொரு மாதமும் கதம்பம் இதழை மிக அருமையாக ஆண்களுக்கு, பெண்களுக்கு, குழந்தைகளுக்கு என பலதரப்பட்ட கட்டுரைகளும், படங்களும் வழியாக சிறப்பாக வழி நடத்தி வருகிறீர்கள். தங்களது நற்பணிக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.





**சிவசக்தி அறிவுக்கண்ணன்**

# நன்றி உரை

கதம்பம் இதழில் தங்கள் கதை, கட்டுரை, கவிதை மற்றும் பல பயனுள்ள விஷயங்களை இரிச்மண்டு சமூகத்துடன் பகிர்ந்து கொண்ட அனைத்து எழுத்தாளர்களுக்கும் தமிழ்ச்சங்க நிர்வாக குழுவின் மனமார்ந்த நன்றிகள்.

All submissions for Kadambam/கதம்பம் should be emailed to newsletter.rts@richmondtamilsangam.org by the 15th of each month.

## நன்றி!

செய்திமடலை சரிபார்த்து வெளியிட உதவிய மார்செலின், சந்தானம், சுபா பாபு , ஸ்ரீ லதா, இளமாறன் ஆகியோருக்கு எனது மனமார்ந்த நன்றிகள் மற்றும் எங்கள் செய்திமடலுக்கு ஆதரவளித்த அனைத்து RTS குழு உறுப்பினர்கள் மற்றும் அனைவருக்கும் நன்றி.

## Feedback

இந்த மாத செய்திமடல் பற்றி கருத்து தெரிவிக்க கீழே உள்ள இணைப்பை பயன்படுத்தவும்

**Click Here!**

newsletter.rts@richmondtamilsangam.org எனும் மின்னஞ்சலிலும் எங்களை தொடர்பு கொள்ளலாம். நன்றி!

## website:

www.richmondtamilsangam.com

## contact us:

richmondtamilsangam@gmail.com
newsletter.rts@richmondtamilsangam.org
tamilschool@richmondtamilsangam.org